## பத்தாம் வகுப்பு – தமிழ்
## இரண்டாம் தாள்
## (இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)

**காலம் : 02.30 மணி** **மதிப்பெண் : 100**

**குறிப்பு: விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவிலும் அமைதல் வேண்டும்.**

### பகுதி – அ

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 20 x 1 = 20**

1. 'வெளவால்' – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது ?
2. மரவேர் – இச்சொல்லைப் பிரித்து எவ்வகைப் புணர்ச்சி எனக் கூறுக.
3. 'வேய்புரை தோள்' – இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு யாது ?
4. நண்பகல் – இச்சிறுபொழுது எத்திணைக்குரியது. ?
5. ஆடுவாயா என்ற வினாவுக்குப் பாடுவேன் என்று கூறுவது எவ்வகை விடை ?

6. வல்லினம் மிகும் இடங்களுள் இரண்டனைச் சான்று தந்து விளக்குக.
7. குழந்தை குதலை மொழியமிழ்து – இப்பாடலடியில் அமைந்துள்ள உருவகத்தை உவமையாக மாற்றுக.
8. பெறு – இச்சொல்லை வினையெச்சமாக்குக.
9. கண்டான் – இவ்வினைமுற்றின் பகுதியை எடுத்தெழுதுக.

10. இறந்தகால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக.
    அ) வருகிறான் ஆ) வருவான் இ) வருகின்றான் ஈ) வந்தான்
11. வினைத்தொகை பயின்று வந்துள்ள சொற்றொடரைத் தேர்ந்தெழுதுக.
    அ) செய்தொழில் ஆ) மாறாஇளமை இ) பூரிகிழங்கு ஈ) தேரும் திருவிழாவும்
12. கீழ்வருவனவற்றுள் பொதுமொழியைத் தேர்ந்தெழுதுக.
    அ) செம்போத்து ஆ) வந்தான் இ) பலகை ஈ) விளக்கம்
13. கீழ்வருவனவற்றுள் உம்மைத்தொகையைத் தேர்ந்தெழுதுக.
    அ) தெருக்கடை ஆ) வெற்றிலைபாக்கு இ) விளக்கெண்ணெய் ஈ) தாயும்சேயும்
14. ஒருபொருட்பன்மொழியைத் தேர்ந்தெழுதுக.
    அ) விருப்பும் வெறுப்புமின்றி வாழ்ந்தான். ஆ) இரவுபகல் பாராது உழைத்தான்.
    இ) உயர்ந்தோங்கிய மலையைக் கண்டேன். இ) பச்சைப்பசேல் என்ற வயல்.
15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.
    படித்து முடித்தவருக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புகள் உள்ளது.
16. கீழ்க்காணும் தொடரில் சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
    உரிமைக்குரல் கொடுத்த நல்லோர்களைதான் நாம் சீர்திருத்தச் செம்மல்கள் என சிந்தை மகிழப் பாராட்டுகிறோம்.
17. கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எழுதுக.
    கலை நம் வாழ்வின் உயிர்நாடி. கலையில்லையேல் நம் வாழ்வில் சந்தோஷமில்லை.
18. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச்சொற்களை நீக்கி எழுதுக.
    வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.
19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.
    மண் என்றால் நிலம் என்பது பொருள் தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐவகையாகப் பிரித்தனர்.
20. கீழ்க்காணும் மரபுத்தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார்.

**ஆ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க. 5 × 2 = 10**

21. நேரிசை வெண்பாவின் இலக்கணம் யாது ? சான்று தருக.
22. கீழுள்ள பாடலில் பயின்றுவரும் பா வகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் எழுதுக.
    தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
    வாய்மொழி புரத்தல் மற்றவர் கடனே
    காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
    ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே.
23. சொல்பின்வருநிலை அணிக்கு எடுத்துக்காட்டுத் தருக.
24. வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுதந்து விளக்குக.
25. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
    நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
    என்றும் இடும்பை தரும்.

## பகுதி – ஆ

**அ) எவையேனும் நான்கனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 4 × 5 = 20**

26. பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தும் அவர்தம் செயல்கள் ஐந்தனைக் குறிப்பிடுக.

27. மனைவியுடன் வீடு திரும்பிய கமலநாதன், வழியில் மறக்காமல் நாலுமுழம் மல்லிகைப்பூவை வாங்கி வந்தான்.

வீடு வந்ததும், முதல் வேலையாக மனைவியிடம் பூவைக் கொடுத்தவன் கண்கள் கலங்கின. "கோகிலா! பூவைத் தலைநிறைய வச்சுக்கொள். எப்பவும் பொட்டும் பூவுமா, சந்தோஷமா நீ இருக்கணும்." என்றான். கோகிலா திகைப்புடன் கணவனைப் பார்த்தாள்.

அ) கமலநாதனின் கண்கள் கலங்கக் காரணமென்ன ?

28. அகழாய்வு மேற்கொள்ளும்பொழுது பின்பற்றவேண்டிய வழிமுறைகள் யாவை ?

29. ''என்னடியம்மா இந்தக் குட்டியெல்லாம் இப்படிக் கத்துதே. கவனிக்கக் கூடாதா, பாவம் ? என்றாள் கிழவி.

''அந்த நாய் காலையிலே போனது இன்னும் வரவில்லை அத்தை. பால் இல்லாமல் குட்டி எல்லாம் கத்துது'' என்றாள் மருமகள்.

அ) குறட்டை ஒலி என்னும் இக்கதையில் இடம்பெறும் மருமகளின் கருணை உள்ளத்தை எடுத்துக்காட்டுக.

30. திருவருட்பிரகாச வள்ளலாரின் பன்முக ஆற்றலை எழுதுக.
31. அண்ணா எழுதிய கடிதத்தில் இடம்பெறும் கருத்துகள் நான்கனை எழுதுக.

## பகுதி – இ

**32. கீழ்க்காணும் குறிப்புகளைக்கொண்டு ஒரு பக்க அளவில் விரிவான கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்றும் தருக. 8**

கணினி – தோற்றம் – வளர்ச்சி – இணையம் – இணையத்தள வசதி – கணினிவழிக் கல்வி – கணினியின் வியத்தகு சாதனைகள் – பயன்படும் துறைகள்– உலகம் உள்ளங்கையில்

**(அல்லது)**

சுற்றுப்புறச் சூழல் – மாசுக்கட்டுப்பாடு – இயற்கையை அழித்தல் – காற்று மாசு – நச்சுப்புகை – நீர் மாசு – தொழிற்சாலையின் கழிவு – மாசடைந்த நீர் – ஒலி மாசு – ஒலிபெருக்கி – இரைச்சல் – நரம்பு மண்டலம் பாதிப்பு – கட்டுப்படுத்தும் வழிகள்.

**(கடிதம்)**

33. நும் ஊரில் குடிநீர் வசதி செய்துதருமாறு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு விண்ணப்பம் வரைக. 8

**(அல்லது)**

தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் தயாரிக்க.

**பகுதி – ஈ**

34. கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவுசெய்து, பொருத்தமான தலைப்புத் தருக. 5

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தத்தம் கூடுகளைவிட்டுப் பறக்கத் தொடங்கின. அந்த விடியற்காலை நேரத்தில் திடீரென்று வானில் ஓர் ஒளி தோன்றியது. அப்போது –– –– –––

35. கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக. 5

மழை அல்லது கடல்

36. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களையும் எடுத்தெழுதுக. 5

சோற்றைஅள் ளுங்கால் துவள்வாழைத் தண்டிலுறும்
சாற்றைப்போ லேவடியத் தக்கவண்ணம் – ஊற்றுநெய்யை
வாழை இலையின் அடி உண்பார் வலப்புறத்தில்
வீழ விரித்துக் கறிவகைகள் – சூழவைத்துத்
தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும் – பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத் தக்கபடி
கேட்கும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே!

– பாரதிதாசன்

**37) கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 5**

மொழியென்பது சமூகத்தால்தான் வளர்ச்சி பெறும். மொழி இன்றேல் சமூகமாக இயங்க முடியாது. எனவே, ஒன்றுபட்ட பொது வாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதது என்பது பெறப்படுகிறது. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் உறவாடுவதற்கு மொழியே சிறந்த கருவியாக அமைகின்றது. சாதாரண மக்கள் தாய்மொழியையே ஒரு சிறந்த கருவியாகக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக நாம் நமது எண்ணங்களைப் பேச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் வெளியிடுவதற்கு நமது தாய்மொழியையே கையாளுகின்றோம். ஒருமொழி நிலைத்து நிற்கவேண்டுமானால் பேச்சுமொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சிமொழியாக, வழிபாட்டுமொழியாக, நீதிமன்ற மொழியாக, கல்வித் துறையில் பயிற்றுமொழியாக நிலைபெற்றிடவேண்டும். பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், குலங்கள், நிலைகள், தொழில்கள் ஆகியவற்றால் வேற்றுமையுற்ற பல பிரிவினர்களும்,

பேசும் தாய்மொழியால் ஒன்றுபடுவதைக் காணும்போது தாய்மொழியின் பேராற்றலை என்னவென்று கூறுவது ?

**அ.** மொழியின் பயன் யாது ?
**ஆ.** ஒரு மொழி நிலைத்து நிற்கச் செய்ய வேண்டுவன யாவை ?
**இ.** தாய்மொழியின் பேராற்றலை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார் ?
**ஈ.** இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.
**உ.** ஆசிரியரின் கூற்றுப்படி மொழி என்பது
1. தனி மனிதரால் வளர்ச்சி பெறும்.
2. சமூகத்தால் வளர்ச்சி பெறும்.
3. தனி மனிதராலும் சமூகத்தாலும் வளர்ச்சி பெறும்.

**38) அ) கீழ்க்காணும் சூழலைப் படித்து, அது குறித்துக் கேட்கப்பட்டுள்ள வினாவிற்கு விடை எழுதுக. 3**

வளவனின் நெருங்கிய நண்பன் மாறன். சில நாள்களாக உடல்நலமில்லாமல் இருந்த மாறன் நேற்று எதிர்பாராத விதமாக மாடிப்படியிலிருந்து கீழே விழுந்ததில் முற்றிலுமாகத் தன்சுயநினைவை இழந்துவிட்டான். மாறனின் நிலை கண்டு வளவன் மிகவும் வருத்தமடைந்தான். உணவு உண்பதற்குக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மன வருத்தம் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் எவ்வளவு தான்ஆறுதல் மொழிகள் கூறினாலும் , அவனால் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

1. வளவன் ஏன் மனவருத்தத்துடன் இருந்தான் ?
2. நமக்குத் தாங்க இயலாத துன்பம் ஏற்படும்போது அதிலிருந்து மீள வழி யாது ?
3. இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை ?

**ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க. 2**

விழிமாற்றுத்திறனாளர் ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக்கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் நடந்து செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

1. இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய் ?
2. பிறருக்கு உதவுவதன்மூலம் வெளிப்படும் பண்பு யாது ?

39. அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. **2**

‘ **பஸ்** ஏன் இவ்வளவு **ரஷ்ஷாக** இருக்கிறது ? நிற்கக்கூட முடியவில்லை, உட்காருவதற்கு ஒரு **சீட்** கிடைத்தால் நன்றாக இருக்கும் **. லேட்டாகப்** போனால் **, ஆபிஸல மேனேஜர்** கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது’.

**ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக. 2**

**75, 39, 148, 260**

**40. அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்து எழுதுக. 3**

Educational Institutions are the true seats of learning. The students, who are really anxious to learn, can develop healthy habits only in the schools. In a school we are taught how to move in society, how to behave with others and how to progress in life.

**ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக. 2**

1. Health is wealth

2. Make hay while the Sun shines.

‘’’’’’’’’’’’’’’’’’’’’’’’’’